[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 செப்டம்பர் 6

கொள்ளுங்கள். அதிலும்கூட, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்று போடுகிறார்கள். அதிலே எங்களுக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம், தமிழகத்திலே ஏறக்குறைய 200 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரக்கூடிய வகையில் கள்ளுக்கடைகள். சாராயக்கடைகளைத் திறந்துவிட்டு, மக்களிட மிருந்து பெற்ற இதுமாதிரிப் பணத்தைக் கொண்டு 100 கோடி ரூபாய் கொடுக்கும்பொழுது அதைப்பற்றி பிரபல்யமாகப் பேசுகிறீர்கள். இப்பொழுது அவைக்குள்ளே முதலமைச்ச ரவர்கள் வந்திருக்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்று சொல்வது போல், முதலமைச்சர் சாராயக் கடை நம்பர் ஏழு என்று போடத் தயாரா ? மக்களைக் கருத்துக் குருடர்களாகக் கருதி, அவர் களுடைய பலகீனத்தைப் புரிந்து கொண்டு நீங்கள் செயல் படுகிறீர்கள் ? 200 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றால் 2,000 கோடி ரூபாய்க்குக் குடிப்பார்கள் ஒரு ஆண்டிலே என்று பொருள்.....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு மரியாதைக்குரிய நண்பர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு நல்ல பிரச்னையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அவர்கள் பேசியதன் விளைவுதான் கொறடா அவர்கள் குறுக்கிட வேண்டிய அவசியம் வந்தது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டத்தைக் கொண்டு வந்தது சரியா இல்லையா என்பது வேறு ; திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற முறை சரியா இல்லையா என்பது வேறு. நடைமுறைப்படுத்துவதில் பாரபட்சம் காண்பிக்கப்பட்டது என்பது குற்றச்சாட்டு. ஒரு திட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக இருக்கின்ற ஒரு குழுவிலே இடமளிக்க நியாயம் இல்லை என்பது கொறடாவின் பதில்.

இதைப்பற்றி மதிப்புக்குரிய திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் குறிப்பிடும்பொழுது காமராஜ் கொண்டுவந்த திட்டத்தைத் தொடர்ந்து செய்கிறார்கள், அவர்களுடைய பெயரைச் சொல்லக்கூடாது என்பதற்காக முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்று சொல்லி அந்தப் புகழை நாங்கள் பெற விரும்புவதாகக் கூறினார்கள். எங்களைப் பொறுத்த வரையில் புகழைப்பற்றிக் கவலையில்லை; தேவையைப் பூர்த்தி செய்ய முயல்கிறோமா என்பதை நாடு புரிந்து கொள்ள வேண்டுமென்பதுதான்.

இங்கே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், இருப்பவர்களைப் பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு எடுத்துக் கொள்வது நியாயம் ; ஆனால் இல்லாதவர்களைப்பற்றி விவாதம் எழுப்புவது முறை அல்ல, அது நாகரீகமாகவும் இருக்காது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன் ஏனெனில் அதைப்பற்றி பதில் சொல்ல முடியாத அளவில் அவர்கள் மறைந்து விட்டார்கள். அந்தப் பெரியவர்களை விவாதத்திற்கு

1982 (செப்டம்பர் 6] [திரு. எம். ஜி, இராமச்சந்திரன்]

இழுத்தால்—அது நியாயமான விவாதத்தில் போய் முடிந்தாலும் கூட சில உண்மைகள் வெளிவரும்பொழுது புகழத்தக்க தலைவர்களுக்கு நம்மால் இழுக்கு ஏற்படும் அளவிற்குச் சென்றுவிடும். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. எனவேதான், யார் மறைந்தாலும், அவர்கள் தவறுகள் செய்திருந்தாலும், அவர்கள் செய்த நல்லதை மட்டும் பாராட்டுகின்ற அந்தப் பண்பாட்டுச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற முன்ற தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் இருக்கிறது.

அதையொட்டி நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாபெரும் தலைவர் என்று அழைக்கப்படும்—ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற—இதில் வித்தியாசம் இல்லை—காமராஜ் அவர்கள் கொண்டு வந்த திட்டத்திற்கும் இதற்கும் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது என்பதை திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் அறிவார்கள். அது தெரிந்தும் அவரை இழுத்து வைத்துப் பேசி, இது அவர் கொண்டுவந்தது அல்ல என்று நாங்கள் சொல்லும் நிலைமைகளை நாடுமேலே ஏற்படுத்துவது நல்லதல்ல என்பதைப் பணிவன்போடும், உரிமையோடும், நல்ல உணர்வோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள். அது புத்திசாலித்தனமான, சாமார்த்தியமான ஒரு கேள்வி. சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்த , அதை எம்.ஜி.ஆர்—முதலமைச்சர் திட்டம் என்று சொல்கிறார்களே, அதைப்போல மதுவிலக்கைத் தளர்த்தி, சாராயக் கடையை மீண்டும் திறந்ததற்காக அதையும் அவர்களுடைய திட்டமாகக் கொண்டுவர ஒத்துக் கொள்வார்களா என்று கேட்டார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். சொல்லக் கூடாதுதான்—ஆனாலும் சொல்ல வேண்டியிருக்கிறது, இந்தியா முழுமையும் ஆண்டு கொண்டிருக்கின்ற பிரதம அமைச்சரவர்கள், மாநிலங்களில் அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப சாராயக் கடைகளைத் திறக்க அனுமதி தருகிறார்கள். காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களுக்கும் அனுமதி தருகிறார்கள். அதை பிரதம அமைச்சர் திட்டம் என்று சொல்ல முன்வருவார்களேயானால் இங்கேயும் அதை முதலமைச்சர் திட்டம் என்று சொன்னால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆத்திரப்பட மாட்டேன். எனவே, தயவு செய்து இந்த நிலைமைகளை எங்களுக்கு உருவாக்காதீர்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

*திரு.ப. சுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகள் வட்டிப்புச் சட்டத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல நீருக்கிறேன்.